Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    சித்திரை 28    [11-05-93]    செவ்வாய்க்கிழமை    ஓசை 82

## கல்வித்துறையில்மாற்றம் புதிய ஜனாதிபதி திட்டம்

கல்வித்துறையில் மாற்றங்களைச் செய்ய சிறிலங்கா அரசின் புதிய தலைமை திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கல்வித்துறையில் மாற்றங்கள் செய்யப்படும் எனப் புதிய ஜனாதிபதி தனது அறிவிப்பில் குறிப்பிட்டார். எனினும் மாற்றங்கள் குறித்த விபரங்கள் ஏதும் தெரியவரவில்லை. ஆசிரிய பயிற்சித் திட்டத்திலும் பாரிய மாற்றங்கள் செய்யப்படுமென ஜனாதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இராணுவ, பொலிஸ் கட்டமைப்பிலும் தலைமையிலும் மாற்றம் ஏற்படலாம்

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும்

## இன, மத பேதமின்றிப் பணிபுரிய வாழ்த்து

(கொழும்பு)

இனம், மதம் போன்ற பேதங்களுக்கு அப்பாற்பட்டுப் பணிபுரியுமாறு புதிய ஜனாதிபதி டி. பி விஜயதுங்காவிற்கும், புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் அஸ்கிரிய, மற்றும் மல்வத்தை பீடங்களின் பீடாதிபதிகள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலையில் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி டி. பி விஜயதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும். கண்டி தலதா மாளிகையில் இருக்கும் புனித சின்னத்திற்கு மலர் தூவி வழிபட்டதுடன், அங்கு நடைபெற்ற விசேட பூசையிலும் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் உரையில் பீடாதிபதி கவரப்பட்டாராம்

(கொழும்பு)

ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின்னர் ஆற்றிய முதலாவது உரை தன்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டதாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிடம் அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சிறி சந்தானந்த தேரோ குறிப்பிட்டார்.

இன மத பேதமற்றமுறையில் சேவையாற்றப்போவதாக அவ்வுரையில் குறிப்பிட்டுள்ளீர்கள். இதுதான இன்றைய காலத்தின் தேவையுமாகும் என்றும் மகாநாயக்க தேரோ மேலும் குறிப்பிட்டார்.

## மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தில் சூடு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார வேலைகள் ...

வேறு விதமான வர்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு

## புதிய ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

**இன்னும் சில தினங்களில், சிறிலங்கா ஆயுதப்படைகளின் கட்டமைப்பிலும், இராணுவ, பொலிஸ் தலைமைப் பீடத்திலும் பாரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. பல இராணுவ அதிகாரிகளின் பதவிக்காலம் முடிவடைவதன் காரணமாகவும், வடக்குக் கிழக்கில் போரைத் தீவிரமாக்கும் நோக்கமாகவும் இப்படைத்துறை மாற்றங்கள் இடம் பெறவுள்ளதாக தெரியவருகின்றது.**

சிறிலங்கா இராணுவத்தின் இரண்டாம், மூன்றாம் தரத்தில் உள்ள இராணுவத் தளபதிகள் சிலரும், பொலிஸ் தலைமையகத்தில் கால நீடிப்பின் அடிப்படையில் உயர் பதவி வகித்துவரும் சிலரும் விரைவில் ஓய்வுபெறவுள்ளனர்

இதேவேளை வடக்கு-கிழக்குப்போரை விரைவுபடுத்தும் நோக்கிலும் புதிய ஜனாதிபதி இம்மாற்றங்களைச் செய்யவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இம்மாற்றங்களை தனது விருப்பத்திற்கு ஏற்றமுறையில் மேற்கொள்ளும் பொருட்டே புதிய ஜனாதிபதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஒருவரை நியமிக்காது விட்டதாகவும் ஊகிக்கப்படுகின்றது.

இம்மாற்றத்தின்போது இம்மாதத்துடன் பதவிக்காலம் முடிவடையும் இராணுவத் தளபதியின் சேவைநீடிப்பு முக்கிய விவகாரமாக இருக்கும் என அறியமுடிகின்றது. மூப்பின் அடிப்படையில் இராணுவ தளபதி இம்மாதம் ஒய்வுபெற வேண்டுமாகையால், அவரின் சேவைக்காலம் ஜனாதிபதியின் விருப்பின் பேரிலேயே நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆனால், புதிய ஜனாதிபதி இராணுவத் தளபதியின் பதவிக் காலத்தை நீடிப்பது குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக அறியமுடிகின்றது. கூட்டுப்படை நடவடிக்கைகளின் தளகர்த்தா விற்கும் இராணுவத் தளபதிக்கும் ...

மனைவி ஹேமா பிரேமதாசாவிற்கும் இடையிலான உறவு முறையும், இராணுவத் தளபதி பெற்றுள்ள அரசியல்செல்வாக்கில் முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய சகாவான பொலிஸ் மா அதிபரின் நியமனம் குறித்தும் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. மூப்பின் அடிப்படையில் சேவைக்காலம் முடிவுற்றபோதும் வழமைக்குமா

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலிருந்து வெளியேற தமிழ் மக்களுக்குத் தடை


(மன்னார்)

மன்னார் பெருநிலப்பரப்பில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் வெளியேற இராணுவம் அனுமதி மறுத்துள்ளது. படையினர் மன்னார் பெருநிலப்பரப்பில் மேற்கொண்ட பச்சைப்பட்டி இராணுவ நடவடிக்கையின்போது சிலர் படையினரிடம் சிக்கினர்.

இம் மக்கள் தமது அலுவல்கள் நிமித்தம் வெளியே செல்லவேண்டுமானால் தமது அடையாள அட்டைகளை ...

சமயம் படையினரிடம் சிக்கியுள்ள மக்கள் படையினரின் கெடுபிடிக்குள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு



## வால்டர் பெர்னான்டோ நியமனம்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக எயர் சீப் மார்ஷல் வால்டர் பெர்னான்டோ நியமனம் பெற்றுள்ளார். முன்னைய செயலாளரான ஜெனரல் சிறில் ரணதுங்கா அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது இடத்திற்கு வால்டர் பெர்னான்டோ நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வண. சிங்கராயர் மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

வணக்கத்திற்குரிய ஆ. சிங்கராயர் நேற்று மாரடைப்பால் மரணமானார். நேற்றுமாலை 6 மணியளவில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து இவர் யாழ்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சக சிப்பாயின் சூட்டுக்கு இரண்டு படையினர் பலி

(திருமலை)

திருமலையில் இராணுவப் பதுங்கு குழியில் கடமையிலிருந்த சிப்பாய் ஒருவர் ஆத்திரம் கொண்ட நிலையில் நடத் ... னர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய சிப்பாய் சக படையினரிடம் பணம் கேட்டதாகவும் அவர்கள் அதை வழங்க மறுத்ததை ...

பீடாதிபதிகள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலையில் கண்டி தலதா மாளிகை கொண்டனர்.

அதன் பின்னர் அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளைச்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## ஜனாதிபதியின் உரையில் பீடாதிபதி கவரப்பட்டாராம்

(கொழும்பு)

ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின்னர் ஆற்றிய முதலாவது உரை தன்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டதாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிடம் அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சிறி சந்தானந்த தேரோ குறிப்பிட்டார்.

இன மத பேதமற்றமுறையில் சேவையாற்றப்போவதாக அவ்வுரையில் குறிப்பிட்டுள்ளீர்கள். இதுதான இன்றைய காலத்தின் தேவையுமாகும் என்றும் மகாநாயக்க தேரோ மேலும் குறிப்பிட்டார்.

## மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தில் சூடு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார வேலைகள் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. பல் வேறு விதமான வர்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

லலித், பிரேமதாசா கொலை

## சந்தேக நபர்களின் பின்னணி அறிய முயற்சி

(கொழும்பு)

கொலைச் சந்தேக நபர்களின் குடும்ப பின்னணிகள் பற்றி விசாரித்து அறிவதில் குற்றப் புலனாய்வு பிரிவு பொலிசார் ஈடுபட்டு உள்ளனர். ஜனாதிபதி பிரேமதாசா மற்றும் லலித் அத்துலத்முதலி கொலையுண்ட சம்பவங்களில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர்களின் குடும்ப பின்னணிகளை அறிவதிலேயே பொலிசார் நாட்டம் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

## உறவு பலமடைவதற்கு ஒத்துழைக்கத் தயார்

- டி. பி கஙு ராவ் தெரிவிப்பு

(கொழும்பு)

உறவுகள் பலமடைவதற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கத் தயாராக இருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச்செய்தியில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிமராவ் கூறியுள்ளார்.

அச்செய்தியில் மேலும், சிறப்பான உயர் குணங்களும், மக்கள் மத்தியில் ஆளுமையும் கொண்ட அரசியல்நிபுணரான உங்களால் இலங்கை மக்களுக்கு சிறந்த தலைமையை வழங்க முடியும் என்று உறுதியாக நம்புவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

லலித் கொலை விசாரணையை

# பிழையான பாதையில் திருப்ப பொலிஸ் முயற்சி

## விக்கிரம வீரசூரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பாக பொலிசார் வெளியிட்ட அறிக்கையை தமது கட்சி என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டாது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பேச்சாளர் கலாநிதி விக்கிரம வீரசூரிய செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

முன்னரும் தமது கட்சி இந்த பொலிஸ் அறிக்கையை எதிர்த்தது எனவும், தொடர்ந்தும் தாம் எதிர்க்கப்போவதாகவும், இதன் முக்கிய காரணம் விசாரணையைப் பிழையான பாதையில் கொண்டு செல்லும் முயற்சிகளில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர் என்றும் இவ் விவகாரத்தினைப் புலிகளின்மேல் போடுவதன் மூலம் தாம் சுலபமாகத் தப்பித்துக்கொள்ள முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தில் உள்ள இராணுவத் தளபதிகள் சிலரும், பொலிஸ் தலைமையகத்தில் கால நீடிப்பின் அடிப்படையில் உயர் பதவி வகித்துவரும் சிலரும் குப்போரை விரைவுபடுத்தும் நோக்கிலும் புதிய ஜனாதிபதி இம்மாற்றங்களைச் செய்யவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இம்மாற்றங்களை தனது

## மன்னாரிலிருந்து வெளியேற தமிழ் மக்களுக்குத் தடை

(மன்னார்)

மன்னார் பெருநிலப்பரப்பில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் வெளியேற இராணுவம் அனுமதி மறுத்துள்ளது. படையினர் மன்னார் பெருநிலப்பரப்பில் மேற்கொண்ட பச்சைப்பட்டி இராணுவ நடவடிக்கையின்போது சிலர் படையினரிடம் சிக்கினர்.

இம் மக்கள் தமது அலுவல்கள் நிமித்தம் வெளியே செல்லவேண்டுமானால் தமது அடையாள அட்டைகளை படையினரிடம் ஒப்படைத்துவிட்டே செல்லமுடியும். இதே சமயம் படையினரிடம் சிக்கியுள்ள மக்கள் படையினரின் கெடுபிடிக்குள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளாலி – பூநகரி

## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் நிதித்துறை, யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளரின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை புதன்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3-00 மணி தொடக்கம் 4-00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதுக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## வீரச்சாவு



கப். வளவர்கோன் (ஜீவகுமார்)

முல்லைத்தீவு மாவட்டம் மணலாறு பகுதியில் சிறிலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் நேற்று நடைபெற்ற திடீர் மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் வளவர்கோன் / ஜீவகுமார் (இளையதம்பி மோட்சேந்திரன் பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை.)



லெப். தமிழ்மல்லன் (சுந்தரேஸ்)

லெப்டினன்ட் தமிழ்மல்லன்/ சுந்தரேஸ் (வேலு சண்முகம்- சுன்னாகம் தெற்கு சுன்னாகம்) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

புதிய ஜனாதிபதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஒருவரை நியமிக்காது விட்டதாகவும் ஊகிக்கப்படுகின்றது.

இம்மாற்றத்தின்போது இம் மாதத்துடன் பதவிக்காலம் முடிவடையும் இராணுவத் தளபதியின் சேவைநீடிப்பு முக்கிய விவகாரமாக இருக்கும் என அறியமுடிகின்றது. மூப்பின் அடிப்படையில் இராணுவ தளபதி இம்மாதம் ஒய்வுபெற வேண்டுமாகையால், அவரின் சேவைக்காலம் ஜனாதிபதியின் விருப்பின் பேரிலேயே நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆனால், புதிய ஜனாதிபதி இராணுவத் தளபதியின் பதவிக் காலத்தை நீடிப்பது குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக அறியமுடிகின்றது. கூட்டுப்படை நடவடிக்கைகளின் தளகர்த்தாவிற்கும் இராணுவத் தளபதிக்கும் உள்ள முரண்பாடும், இராணுவத்தளபதிக்கும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் முறையும், இராணுவத் தளபதி பெற்றுள்ள அரசியல்செல்வாக்கில் முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய சகாவான பொலிஸ் மா அதிபரின் நியமனம் குறித்தும் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. மூப்பின் அடிப்படையில் சேவைக்காலம் முடிவுற்றபோதும் வழமைக்குமாடிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(4ஆம் பக்கம் பார்க்க)

வண. சிங்கராயர் மாரடைப்பால்

## மரணம்

(யாழ்ப்பாணம்)

வணக்கத்திற்குரிய ஆ. சிங்கராயர் நேற்று மாரடைப்பால் மரணமானார். நேற்றுமாலை 6 மணியளவில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து இவர் யாழ்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சக சிப்பாயின் சூட்டுக்கு இரண்டு படையினர் பலி

(திருமலை)

திருமலையில் இராணுவப் பதுங்கு குழியில் கடமையிலிருந்த சிப்பாய் ஒருவர் ஆத்திரம் கொண்ட நிலையில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அவருடன் கடமையிலிருந்த 2 சிப்பாய்கள் பலியாகினர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய சிப்பாய் சக படையினரிடம் பணம் கேட்டதாகவும் அவர்கள் அதை வழங்க மறுத்ததையடுத்தே அவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரசின் புதிய அறிவிப்புகள் வெளிப்படையான இலஞ்சம்

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி விஜயதுங்கா அரச ஊழியர்களுக்கு மாகாணசபைத்தேர்தல் நெருங்கி வரும் இவ்வேளையில் பல சலுகைகளை அளிக்கமுன் வந்தமை வெளிப்படையான ஒரு இலஞ்ச அறிவிப்பே என எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

விஜயதுங்காவின் இத்தகைய தேர்தல் விதிமுறைமீறல் குறித்து தாம் தேர்தலைக் கண்காணிக்க வரவுள்ள சர்வதேச கண்காணிப்புக் குழுவிடம் புகாரிடப்போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விஜயதுங்காவின் புதிய சலுகை அறிவிப்பினால் சுமார் 32 ஆயிரம் அரச ஊழியர்கள் நன்மையடையவுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

## அமைச்சரின் மகனிற்கு 50 துப்பாக்கிகள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்தும் வன்முறையிலேயே நம்பிக்கை வைத்துச் செயற்படுகிறது எனவும், அதன் போக்கில் மாற்றம் எதுவும் தென்படவில்லை எனவும் ராவய பத்திரிகை ஆசிரியர் ஐவன் தெரிவித்தார்.

தேர்தல் சூடு பிடித்துள்ள இந்த நேரத்தில் அரசாங்கம் தனது வன்முறைச் சுயரூபத்தைக்காட்ட முயற்சிகளைமேற்கொண்டுள்ளது. தேர்தல் நெருங்க நெருங்க வன்முறைகள் அதிகரிக்கும் வாய்ப்புக் காணப்படுகிறது. இதற்குச் சில அமைச்சர்களே முன்னுதாரணமாகக் காணப்படுகின்றனர்.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மென்டிஸ், கம்பஹா மாவட்டத்தில் மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் தனது மகனின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக நீர்கொழும்புப் பொலிஸ் களஞ்சியத்தில் 50 துப்பாக்கிகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாகப் பொலிஸ் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் எனப் பொலிஸ் தலைமைப்பீடத்திற்கும், ஜனாதிபதிக்கும், தேர்தல்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கடற்படைத் தாக்குதலில் மூன்று படகுகள் சேதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கி வேட்டுக்களுக்கு மீனவர்களுக்கு சொந்தமான மூன்று படகுகள் சேதமடைந்தன. மூன்று என்ஜின்கள் கடலில் வீசப்பட்டு நாசமாகின. மூன்று மீனவர்கள் கடற்படையினரால் பலமாக தாக்கப்பட்டனர்.

இக் கடற் பிராந்தியத்தில் நேற்றுக்காலை 6 மணியளவில் ரோந்து சென்ற கடற்படையினர் இத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

முனையைச் சேர்ந்த திரு. வ. அருள்தாஸ், மத்தியூஸ் சிமியோன்பிள்ளை, மற்றும் பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து முனையில் தங்கிவரும் திரு. சி. குமார் ஆகியோரது படகுகள், என்ஜின்கள் சேதமடைந்து நாசமாகின இவர்கள் பலத்த தாக்குதலுக்கும் இலக்காகினர்.

மேற்படி மூவரும்கடலில்மீன் பிடித்து கொண்டிருந்தவேளை எதிர்ப்பட்ட கடற்படையினர் இம்மூவரையும் வளைத்துப் பிடித்து தாக்கிவிட்டு படகுகள் மீது துப்பாக்கிவேட்டுக்களை மேற்கொண்டதாகவும், பின்னர் படகில் இருந்த மூன்று என்ஜின்களையும் கழற்றி கடலில் வீசிவிட்டதாகவும், எரிபொருள்களும் நாசமாக்கப்பட்டதாகவும் கடற்படையினரின் பிடியில் சிக்கி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

...லகம்
யாழ்ப்பாணம்



# வரி விளம்பரம்


## தவறிவிட்டது

ஒரு பிறவுண்கலர் பேர்ஸ் (Frown colour purse) திருநெல்வேலிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. (8-5-93) இதில் உரிமையாளரின் புகைப்படம் உண்டு. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் உரிய சன்மானம் வழங்கப்படும். (4844)

## தேவை

வைத்தியசாலையில் உதவியாளராக கடமையாற்றுவதற்கும் - அனுபவமுள்ள தையலாளர்வீட்டுப்பணியாளர்(பெண்) தேவை. தொடர்பு கொள்ளலாம்: மெடிக்கல் வைத்திய சாலை, ஸ்ரேஷன் றோட், சுன்னாகம். (புகையிரத கடவைக்கு அருகில் வைரவ கோயில் முன்பாக) முடிவு 30-05-93 (4845)

## பழைய பொருள்கள் உத்தரவாதத்துடன்

பல ஆண்டுகளுக்குமுன் உருவாக்கப்பட்ட சுவர் மணிக்கூடுகள், நவநாகரிக பாவனைக்கு வந்துள்ளமையால், உங்கள் பழைய சுவர்மணிக்கூடுகள் யாவும் அனுபவசாலியின் மூலம் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படுகிறது வாரத்திற்கு இரு மணிக்கூடுகள் மட்டும் திருத்தப்படும் டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6542)

## கசற் றேடியோக்களா! கடிகாரங்களா!!

உங்கள் கடிகாரங்களையும், றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள்: டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/6541)

## ஆதாரம் காட்டி பெறவும்

திறப்புக்கோர்வை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டிப்பெறவும்.


## தடுப்பூசி ஏற்றல்

(வடமராட்சி)

மந்திகையில் உள்ள மிருக வைத்தியர் அலுவலகத்தில் கோழிகளுக்கு தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டு வருகின்றன. (யோ)

## தளபாட விநியோகம்

(வடமராட்சி)

வடமராட்சி போரூட் நிறுவனம் அதன் ஆதரவுடன் செயல்பட்டு வரும் பாலர் பாடசாலைகள் மூன்றுக்கு தளபாடங்களை வழங்கியுள்ளது.

மொத்தமாக 60 கதிரைகளும் 30 மேசைகளும் வழங்கப்பட்டன. கொட்டடி, வத்திராயன் மத்தி குடத்தனைப் பகுதிகளில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கு தலா 20 கதிரைகளும் 10 மேசைகளையும் வழங்கியுள்ளது. [யோ]

# வவு. விவசாயக் கல்லூரிக்கு அரச அங்கீகாரம் இல்லை

(வவுனியா)

வவுனியா விவசாயக்கல்லூரியில் விவசாய டிப்புளோமா பட்டம் பெற்ற மாணவர்களின் சான்றிதழ்கள் சிறிலங்கா அரசினால் அங்கீகரிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, அண்மையில் தேசிய ரீதியாக விவசாய போதனாசிரியர், விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைகளில் புள்ளி அடிப்படையில் வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் பலர் முன்னணியில் இருந்த போதும் இவர்களுக்கான விவசாயக் கல்லூரியின் சான்றிதழ்கள் அங்கீகரிக்கப் படாமையினால் நியமனம் வழங்கப்படவில்லை. இதே போல் விவசாய டிப்புளோமா ஆசிரியர் தெரிவுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட போதும் நியமனம் வழங்கப் படவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாண சபையினால் நிர்வகிக்கப்படும் விவசாயக் கல்லூரியின் சான்றிதழ்களை மத்திய அரசு மட்டுமன்றி மாகாண அரசும் கூட அங்கீகரிக்காமையே இந்நியமனங்கள் வழங்கப் படாமைக்கு காரணமாகும் என்று சம்பந்தப்பட்ட மாணவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த விவசாயக் கல்லூரி 1989ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாண அரசினால் அமைக்கப்பட்டது என்பதும், இந்த விவசாயக் கல்லூரி சான்றிதழ்களுக்கு அங்கீகாரம் வழங்கும்படி ஜனாதிபதி செயலக நடமாடும் சேவை வவுனியாவில் இடம் பெற்ற போதும் கூட கோரிக்கை விடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கல்லூரியின் சான்றிதழுக்கு அங்கீகாரம் வழங்கப் படாமையினால் சுமார் பதினேழு மாணவர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## பழமரங்களில் சுரங்கபுழுத் தாக்கம்

எலுமிச்சை, தோடை போன்ற கிச்சிலி [சிற்றசு] குடும்ப பயிர்களில் இலை சுரங்கபுழுவின் தாக்கம் காணப்படுவதாக யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இளம் இலைகள், குருத்துக்கள் பாதிக்கப்படுவதனுடன் பயிரின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது.

இத்தாக்கத்தை கட்டுப் படுத்த இளம் குருத்துக்கள் உருவாகும் போது டிப்ரக்ஸ் என்ற நாசினியில் ஒரு அவுன்ஸ் 4க நீரில் கலந்து (28. மி லீ. நாசினியை 15—16கலன் நீரில் கலந்து) விசிறும்படி மேலும் அச்செய்தி குறிப்பு தெரிவிக்கின்றது.

## சமயா சமய ஊழியருக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

சமயாசமய ஊழியர்களாக கடமையாற்றும் சகல ஊழியர்களும் நிரந்தரமாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஏப்பிரல் முதலாம் திகதிக்கு முன் சிற்றூழியர் பதவியில் சமயாசமய அடிப்படையில் அல்லது தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து ஊழியர்களுமே நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

மேற்படி ஊழியர்கள் இன்று வரை சேவையில் இருந்தால் அவர்களை நிரந்தரமாக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி திரு டி.பி. விஜயதுங்கா உரிய அதிகாரிகளிடம்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திணைக்களங்கள், அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் இந்தத் தரங்களில் வெற்றிடங்கள் இருப்பின் நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஓய்வு பெறுவோர் மற்றும் அதனோடு இணைந்த தரங்களில் உள்ள சேவைகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் தற்போதைய திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது.

கடந்த வருடம் ஏப்பிரல் முதலாம் திகதிக்கு முன்னர் இந்தத் தரங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சமயா சமய ஊழியர்களுக்கு வெற்றிடங்களை நிரப்பும்போது முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாகவும் பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தும் திட்டம் மாற்றி அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க தனியார்துறை நிறுவனங்களில் சேவைகளுக்கேற்ப பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளைப் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படவுள்ளதாகவும் பட்டதாரி மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றும் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் டி. பி. விஜயதுங்காதெரிவித்தார்.

## வீரவணக்கக் கூட்டம்

5-ம் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம் கோட்டத்தின் யாழ். வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று (11-05 93) இரவு 8 00 மணிக்கு, அத்தியடி பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெறும்.

விடுதலைப்புலிகளின் சிறப்புப் பேச்சாளர்களான திரு. சேரலாதன், திரு அரசண்ணா, செல்வி தணிகைச்செல்வி ஆகியோர் மாவீரர்களின் நினைவுரைகளை நிகழ்த்தவுள்ளனர் இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (90)

# தேர்தலை அவதானிக்க சர்வதேச குழு வரும்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களைக் கண்காணிப்பதற்கான சர்வதேச அவதானிகள் குழு கொழும்புக்கு வரவுள்ளது. அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, பிரான்சு, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள்பலர் இதில் இடம் பெற்றுள்ளனர். இப் பிரமுகர்களில் சிலர் ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் குழுவினர் தேர்தல் பிரசாரம், வெகுஜனத் தொடர்புகள் வெளியிடும் செய்திகள்' தேர்தல் பதாகைகள், கட்சிகளின் சின்னங்கள் மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் விதம், தேர்தல் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்த பல்வேறு அதிகாரிகளும் வழங்கும் பங்களிப்பு அவர்களின் பணிகள் என்பன போன்ற விடயங்களை இக் குழுவினர் கண்காணிப்பர் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா கூறியுள்ளார்.


HOT SPRING

ஆங்கிலவார இதழுக்கான விளம்பரங்கள் யாவும்

ஈழநாதம் அலுவலகத்திலும்
விளம்பரப் பணிமனைகளிலும்
ஏற்றுக் கொள்ளப்படும்.

ஈழநாதம்,
81, மகேந்திரா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


## 1-ம் ஆண்டு நினைவலையில்



மலர்வு:
18-07-1917
மறைவு:
23-04-1992

**கார்த்திகேசு கந்தையா**
(பெரியதம்பி)
திதி:- 11. 05. 93

தந்தை என்ற சொல்லுக்கு
இலக்கணம் வகுத்தவரே
தன்னலம் பாராது தளர்வின்றி
உழைத்தவரே
கனக்குடன் கன்னம்பிக்கையும்


## ஓராண்டு நினைவஞ்சலி





பாணம். (சி-6542) வழங்கியுள்ளது. [யோ] கின்றது.

# ஓராண்டு நினைவஞ்சலி





**த. சசிகுமார்**
(கண்ணன்)
பெரியபுலம் மகாவித்தியாலய
மாணவன்

மலர்வு: 5. 10. 1875
உதிர்வு: 23. 4. 1992

**த. ரஞ்சித்குமார்**
(ரஞ்சன்)
கொக்குவில் இந்துக்கல்லூரி
மாணவன்

மலர்வு: 20. 2. 1977
உதிர்வு: 23. 4 1992

திதி 11-5-93

ஓராண்டு கழிந்தாலும்
உம் நினைவை மறப்போமோ
அண்ணன் தம்பி இருவருமே
அநியாயமாய் உயிர்துறந்தீர்
உடல்கள் வேறெனினும்
ஒருயிராய் வாழ்ந்தோமே
எம்முயிர்கள் பிரியும் வரை
உம் பிரிவு வாட்டுதையோ
ஆறாதே எம் மனம்
அழுதழுது வாடுகிறோம்.
கொடியவர்கள் வைத்த கொம்படி
குண்டு கடைதனிலே உம்மைப் பறித்ததுவோ
இளகிய எம்மனதில்
இடிகள் விழுந்ததுவோ?
துடியாய் துடிக்கின்றோம்.
பதைபதைத்து மயங்குகிறோம்
ஒரு கணம் கூட உறங்க முடியவில்லை.
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவால் வாடுகிறோம்
எம் மனதை ஆற்றிட நீர்
எழுந்து எம்முன் வாரீரோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். சாந்தி, சாந்தி, சாந்தி

உம் நினைவால் நிதம் வாடிடும்
அப்பா, அம்மா, தங்கைமார், தம்பிமார், அப்பு, அம்மம்மா, அப்பம்மா, மாமா, மாமி, சின்னையா, சித்தி, சித்தப்பா, அன்ரி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சகமாணவர்கள்.

தட்டுவன் கொட்டி.
ஆனையிறவு.
(4838)

விடுத்துள்ளார்.

திணைக்களங்கள், அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் இந்தத் தரங்களில் வெற்றிடங்கள் இருப்பின் நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஓய்வு பெறுவோர் மற்றும் அதனோடு இணைந்த தரங்களில் உள்ள சேவைகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் தற்போதைய திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது.

கடந்த வருடம் ஏப்பிரல் முதலாம் திகதிக்கு முன்னர் இந்தத் தரங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சமயா சமய ஊழியர்களுக்கு வெற்றிடங்களை நிரப்பும்போது முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாக

### வீரவணக்கக் கூட்டம்

5-ம் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம் கோட்டத்தின் யாழ். வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று (11-05 93) இரவு 8 00 மணிக்கு, அத்தியடி பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெறும்.

விடுதலைப்புலிகளின் சிறப்புப் பேச்சாளர்களான திரு. சேரலாதன், திரு அரசண்ணா, செல்வி தணிகைச்செல்வி ஆகியோர் மாவீரர்களின் நினைவுரைகளை நிகழ்த்தவுள்ளனர் இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (90)

## நன்றி நவில்கின்றோம்

07-05-93இல் இணுவை மக்களால் எடுக்கப்பட்ட எமது மணிவிழாவுக்கு அடிநாதமாகச் செயற்பட்ட மணிவிழா செயற்குழுவுக்கும், மணிவிழாமலரை மலரவைத்த பெரியார்களுக்கும், ஆசியுரைகள் சொரிந்த சமயகுரவலர்களுக்கும், கல்வியாளர்களுக்கும், யாழ் கல்வித்திணைக்கள, கோட்ட அலுவலக உத்தியோகத்தர்களுக்கும், வீதிகள் தோறும் பூரணகும்பங்கள் ஏற்றி மலர்மாலைகள் சூட்டிக் கௌரவித்த அன்பர்களுக்கும், யாழ் மாவட்டத்தின் தூர இடங்களிலிருந்து மலர்மாலைகளுடனும் வாழ்தது மடல்களுடனும் வருகை தந்து ஆசி கூறிய அன்புள்ளங்களுக்கும், தமிழீழக் கல்வி மேபாட்டு சபையினருக்கும், மணிவிழா பற்றிய செய்திகளை பிரசுரித்த பத்திரிகை நிறுவனங்களுக்கும், விழாவை வனப்புடன் அமைத்து வெற்றிகண்ட இணுவை வாழ் மக்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைக் கூறுகின்றோம்.

(சி-6605) இ. சுந்தரலிங்கம் குடும்பம்.

புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்

## வாக்காளர் பட்டியல்

31-03-1893

எமது சங்கத்தின் 31 3 93 வரையிலான வாக்காளர் பட்டியல்கள் பின்வரும் கிளைகளில் 11. 5. 93 தொடக்கம் 20.5.93 வரை அங்கத்தவர்களின் பார்வைக்காக வைக்கப்படும். இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலம் 21 5. 93 தொடக்கம் 31. 5. 93 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ ''செயலாளர், புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ. கூ. சங்கம், 201/1, 3-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விபரம்:

கிளை இல. 1. 2, 6, 7, 12, 13. 14, 15. 16
ஜும்மா பள்ளிவாசல்வீதி, யாழ்ப்பாணம்.
கிளை இல. 3, 5 - இல. 15, சிறாம்பியடிவீதி,
மணியம் கட்டிடம், யாழ்ப்பாணம்.
கிளை இல. 9 - இல.147, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை இல. 10 - இல.174, கே. கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை இல. 19, 20 - இல 201/1, 3-ம்குறுக்குத்
தெரு, தலைமைக்காரியாலயம், யாழ்ப்பாணம்.

செயலாளர். தலைவர்.

[சி-6600]



மலர்வு:
18-07-1917
மறைவு:
23-04-1992

## கார்த்திகேசு கந்தையா

(பெரியதம்பி)

திதி:- 11. 05. 93

தந்தை என்ற சொல்லுக்கு
இலக்கணம் வகுத்தவரே
தன்னலம் பாராது தளர்வின்றி
உழைத்தவரே
தனத்துடன், தன்னம்பிக்கையும்
சேர்த்தளித்தவரே;
தந்தை சொல்மிக்க மந்திரம்
இல்லை யென்று தரணியிலே வாழ வைத்தவரே!
நீங்கள் மறைந்தாலும் மறையவில்லை நினைவுகள்
நினைப்போம், நிறைவேற்றுவோம், நின் பணிகளை
தொடர்ந்தே

இந்நிகழ்வில் கலந்து சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம்.

314, ஸ்கந்தபுரம்
கிளிநொச்சி. (4847)

திருமதி. க. இராசம்மா
குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-11

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - கல்லடி முகாமில் வைத்து சிறிலங்கா அதிரடிப்படையினரால் கொலைசெய்யப்பட்ட -

நாதன் (கந்தசாமி சிவநாதன் - திருப்பழுகாமம்-மட்டு)

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

சிவா (சிவலிங்கம் சிவானந்தன் - பதுளை)

1991ஆம் ஆண்டு வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப் பிரிந்த -

சைமன் (கந்தையா சந்திரபாலன் - தர்மபுரம், கிளிநொச்சி)

1992ஆம் ஆண்டு கிளி. – ஆனையிறவு தட்டுவன் கொட்டிப்பகுதியில் சிறிலங்கா தொடர் காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

லெப். லக்சன்/ரவிசங்கர் (மகாலிங்கம் கௌரிமுகுந்தன்-6-ம்வட்டாரம், சாம்பல்தீவு, திருமலை)

2-ம்லெப். கவின்ஸ்/சாந்தன் (கந்தையா பாலசுப்பிரமணியம்-1-ம்யூனிற், திருவையாறு, கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6603)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

கோணிக் கோணிக் கொடுப்பதிலும் பார்க்க கோணாமல் காணி கொடுப்பது மேலானது.

— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-05-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

## ஜே. ஆரின் இலக்கு என்ன?

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படியே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கருத்து வெளியிட்டுள்ளார். மேலும் தற்பொழுது நடைமுறையிலுள்ள அரசமைப்பை மீறிச் செயற்படக் கூடாது எனவும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது சிறிலங்காவின் ஜனாதிபதியாகப் புதிதாகப் பதவி ஏற்றுள்ள டி. பி. விஜயதுங்காவின் பின்னணியில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா செயற்படுவதாகச் சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இப்புத்திமதியானது இலங்கை அரசியலை மீண்டும் ஒருமுறை இந்தியாவுடன் நெருக்கமாக இணைத்து விட அவர் விரும்புவது போன்றே தெரிகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லிக்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓரிரு மாதங்களிலேயே தமிழ் மக்களினால் முற்றாக நிராகரிக்கப்பட்டது. பின்னர் சுமார் இரண்டரை வருடங்களின் பின் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு முற்றாக வெளியேறிய பின்னர் ஒப்பந்தம் முற்றாகத் தோல்வியில் முடிந்த ஒன்றாகவே சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனா அறிமுகப்படுத்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையும், அவர் கையொப்பம் இட்ட இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையும் இலங்கையில் அரசியல் வரலாற்றில் ஏற்படுத்திய அனர்த்தங்கள் தற்பொழுது சொல்லி விளங்க வைக்க வேண்டியதொன்றல்ல. கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கு இவை இரண்டும் ஆற்றிய பங்கு அளப்பரியன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறப்பட்ட இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்தாகி இரண்டு மாதங்களின் பின் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததுடனேயே ஒப்பந்தம் தோல்

# பிரேமாவின் கதிரைக்கு குறிவைக்கிறார் ஹேமா

அனுதாப அலைகளை அரசியல் மூலதனமாகப் பயன்படுத்துவது அப்படி ஒன்றும் புதுமையானதல்ல. உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெயரைத் தட்டிக் கொண்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தமது கணவர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் அகால மரணத்தால் எழுந்த அனுதாப அலைகளில் வெற்றி பெற்றுக் கொண்டவர் என்பதும், பிலிப்பைன்சின் முன்னாள் சர்வாதிகாரி மார்க்கோசினால் கொலையுண்ட அக்கியூனோவின் மனைவி பின்னர் அரசியலில் ஈடுபட்டு மார்க்கோசை விரட்டி அடித்தார் என்பதும், பங்களாதேசின் திருமதி ஹசீனா வசீத்தும், திருமதி பேகம் காலிதா ஸியாவும் இராணுவச் சதிப்புரட்சிகளில் முறையே தந்தையான முஜிபுர் ரஹ்மானையும், கணவரான ஸியாவுர் ரஹ்மானையும் இழந்தவர்கள் என்பதும், பாகிஸ்தானின் பெனாசிர் பூட்டோவும் இராணுவச் சதிப் புரட்சியில் கொலையுண்ட சுல்பிகார் அலிபூட்டோவின் புதல்வி என்பதும், இந்தியப் பிரதமரான திருமதி இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டதால் கிளர்ந்த அனுதாப அலையினால் தான் ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராக முடிந்தது என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது. இந்த வகையில்கொல்லப்பட்டுவிட்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசாவும் கண்ணீரைத் தனது அரசியலுக்கு முதலீடாகப் பயன்படுத்த விழைவது எதிர்பார்க்கக்கூடியதே.

திருமதி ஹேமா பிரேமதாசா நீண்ட காலமாகவே அரசியல் அபிலாசைகளைக் கொண்டிருந்தவர் என்பது அவரது நடவடிக்கைகளை அவதானித்து வந்திருப்பவர்களின் அபிப்பிராயம். சமூகசேவகியாக - சேவா வனிதா இயக்கத்தின் தலைவியாக - பல்வேறு சந்தர்ப்பங்களில் தன்னை விளம்பரப்படுத்துவதில் அவர் காட்டிவந்த ஆர்வமும், அக்கறையும் அரசியல் அபிலாசைகளின் வெளிப்பாடு என்றே பொதுவாகக் கருதப்பட்டு வந்தது. தென்னாசிய பிராந்திய நாடுகளின் முதல் பெண்மணிகளின் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்று அவர் ஆலோசனை தெரிவித்ததும், அதற்கான முயற்சியில் அவர் வெளிப்படையாகவே ஈடுபட்டதும், திருமதி ஹேமாவின் அபிலாசைகளுக்கு கட்டியம் கூறுபவையாகும்.

ஆனால் திருமதி ஹேமாவைப் பொறுத்தவரையில் அவரது அரசியல் பிரவேசம் வரவேற்புக்குரியதாகவோ அல்லது விருப்பத்துடன் ஏற்கப்படக் கூடியதாகவோ ஒருபோதும் இருக்கப்போவதில்லை என்பது தெளிவு. சாதாரணமாகவே கல்லும்,முள்ளும் நிறைந்த கடினமானபாதை என்று வர்ணிக்கப்படும். அரசியல் அதிகாரப் போட்டியானது ஹேமாவைப் பொறுத்தவரையில் முள்படுக்கையாகவே இருக்கும். இதற்கான புறக்காரணங்கள் மற்றும் சூழல்கள் என்பவற்றை விடவும் ஹேமாவின் அகக்காரணங்களே இங்கு முக்கியமாகிறது. முதலாவதாக இதுகால வரையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்த ஒரு உறுப்பினர் பதவியையும் வகித்திராதவரான திருமதி ஹேமா எடுத்த எடுப்பிலேயே ஜனாதிபதி பதவிக்கு இலக்கு வைப்பதும், அதற்கு தமது கணவரின் அரசியல் இலக்குகளைநிறைவு செய்யும் முயற்சி வர்ணனை செய்வதும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்கப்படும் என்று கூறுவதற்கில்லை ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே பிரேமதாசா பெரும் நெருக்கடிகளை,எதிர்நோக்கியிருந்தார் என்பதும்,அரசியல் குற்ற விசாரணை கோரும் பிரேரணையில் தமக்கு எதிராக கையெழுத்திட்ட ஐ.தே.க கறுப்பு ஆடு

### இளையவன்

களைக்கண்டு பிடிக்கும் களை எடுக்கும் முயற்சியில் அவர் இறுதிவரை வெற்றிபெறவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது. அத்துடன் பிரேமதாசாவின் கொலைக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல்கூற ஜனாதிபதி மாளிகைக்கு சென்றவர்களுக்கு திருமதி ஹேமாவே மென்பானம் வழங்கியமையும், இறுதிச் சடங்கின் போது நன்றியுரை கூறுகையில் சிறிசேன கூரேயின் பங்குபற்றி விதந்து கூறியமையும் ஐ தே.க. வட்டாரங்களில் திருமதி ஹேமாவிற்கு மதிப்பு ஏற்படுத்திக் கொடுத்துவிடவில்லை என்றே கருதப்படுகிறது. இந்த நிலை ஹேமா முழுநேர அரசியலில் தீவிரமாக ஈடுபடப்போவதாக விடுத்திருக்கும் பகிரங்க அறிவிப்பு பலருக்கும் சங்கடங்களையே ஏற்படுத்தும் ஒன்றாக இருப்பதில் வியப்பில்லை.

மேலும்,பிரேமாவின் பதவிக் காலம் என்பதும்கூட ஆரம்பம் முதலே இரத்தக்கறை படிந்ததாக இருப்பது ஹேமாவிற்கு ஒரு பின்னடைவாகவே கருதப்படும்.பிரேமா தனது அரசியல் எதிரிகளை அணுகியவிதம் குறித்த சர்ச்சைகளுக்கும்- ஜே வி. பியை அடக்குவது என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட சுமார் 60,000க்கும் மேற்பட்ட படுகொலைகளுக்கும்- பிரேமாவின் பதவிக் காலத்தில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரின் கண்ணீருக்கும், அனுதாபத்திற்கும் கூட திருமதி ஹேமா பதில் சொல்ல வேண்டியிருக்கும். பிரேமாவின் பதவிக் காலச் சாதனைகள் என்று வர்ணிக்கப்படும் கிராமோதயத் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் (ஜனசவிய), ஆடைத் தயாரிப்புத் தொழிற்சாலை. மக்கள் மயமாக்கல்கள், இலவச பாடப் புத்தகம், இலவச சீருடை இன்னும் இதுபோன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் பெரிதுபடுத்துவதன் மூலம் பிரேமாவின் பிரதிமையை மக்கள் மன்றத்தில் நிலை நிறுத்துவதும் கூட மிகவும் கடினமானதாகவே ஹேமாவிற்கு இருக்கும். மேலும் மக்கள் மன்றத்தில் இருக்கும்பிரேமாவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மனநிலை என்பது பிரேமா கொலையுண்டது முதல் இறுதிக் கிரியைகள் நடைபெற்று முடியும் வரையில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இந்த எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு ஐ. தே. கவின் அனைத்துச் சக்திகளும் ஹேமாவிறகுத் துணை நிற்கும் என்பதையும் கூறுவதற்கு இல்லை. இந்தச் சூழ்நிலைகளின் காரணமாகத் திருமதி ஹேமாவின் அரசியல் எதிர்காலம் பிரகாசமானதாக இருக்கப் போவதில்லை எனலாம்.

இன்னும் இலங்கைத் தீவின் எரியும் பிரச்சினைகள் தீர்வின்றித் தொடர்ந்து இழுபடுவது ஒருபுறம் இருக்க, பதவிக்கான போட்டியில் சங்கீதக் கதிரை விளையாடும் அரசியல்வாதிகள் மத்தியில் ஹேமாவின் இடம் என்பது கேள்விக்குரியதொன்றே. சிறிலங்காவின் அரசியலமைப்புக் கூட சர்வாதிகாரிகளையே உருவாக்கும் என்ற நிலையில் பதவிக்கான போட்டியில் மேலும் மேலும் கழுத்தறுப்புக்களும், குழிபறிப்புகளும் இடம்பெறலாம் என்பதால் ஹேமா பிரேமதாசா வெகு விரைவில் - வெகு சுலபத்தில் ஓரங்கட்டப்பட்டு விடுவார் என்பதைத் துணிந்து கூறலாம். அல்லது சிறிலங்கா ஜனாதிபதிப் பதவிக்கான தேர்வில் வெற்றி பெறுவதற்கு ஹேமாவின் கண்ணீரே என்ற முதலீடு மட்டும் பயன்தரப் போவதில்லை எனலாம்.

## இடைத்தேர்தல் ஒத்திவைப்பு அரசியல்கட்சிகள் கண்டனம்

(டில்லி)

பழநி, மற்றும் ஒட்டப்பாலம் தொகுதியில் நடைபெறவிருந்த இடைத்தேர்தல்களை ஒத்திப்போடுவது என்று தேர்தல் கமிஷன் மேற்கொண்டிருக்கும் முடிவை ஜனதா தளம், சி. பி. ஐ மற்றும் சி. பி. எம் கட்சிகள் கடுமையாகக் குறை கூறியுள்ளன.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஜனதா தளம் கட்சியின் ஹரிகிசோர் சிங் மேலும் கூறுகையில் இவ்விதம் தேர்தல் ஒத்திப் போடப்படுவதற்கு காரணமே இல்லை என்றும் குறிப்பிட்டார். தேர்தல் கமிஷனின் இந்த முடிவு தன்னிச்சையானதும் நியாயமற்றதும் ஆகும் என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ குற்றம் சாட்டியுள்ளது. காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்திற்கு புறம்பாக செயற்படுவதை இது காட்டுவதாக சி. பி. ஐ. கட்சியும் சுட்டிக்காட்டியுள்ளது.

## முதல்வர் அன்னை பெயரில் சிறுவர் உலகம் திட்டம்

## குடத்தனை 'ராஜன் நகர்' மேலும் அபிவிருத்தி

(வடமராட்சி)

குடத்தனையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் 'ராஜன் நகர்' மாதிரிக் கிராமம் வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது

வலிகாமம் மேற்கு பகுதிகளில் இருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து குடியமர்த்தப்பட்டுள்ள இக்கிராம மக்

தாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கு ஏற்பட்டுவரும் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் இரண்டு கிணறுகள் அமைக்கப்பட்டும் வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை உத்திராவத்தை கிராமத்திலும் ஒரு பாலர் பாடசாலையை கடந்த 3ஆம் திகதி இக்கழகம் ஆரம்பித்து வைத்துள்ளது. இதில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு. பாடசாலை உபகரணங்களை இணைப்பாளர் திரு இரா. சிவச்செல்வம் வழங்கியுள்ளார். (யோ)

## தமிழகத்தில் புலிகளை

இந்திய இராணுவம் இலங்கையை விட்டு முற்றாக வெளியேறிய பின்னர் ஒப்பந்தம் முற்றாகத் தோல்வியில் முடிந்த ஒன்றாகவே சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனா அறிமுகப்படுத்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையும், அவர் கையொப்பம் இட்ட இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையும் இலங்கையில் அரசியல் வரலாற்றில் ஏற்படுத்திய அனர்த்தங்கள் தற்பொழுது சொல்லி விளங்க வைக்க வேண்டியதொன்றல்ல. கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கு இவை இரண்டும் ஆற்றிய பங்கு அளப்பரியன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறப்பட்ட இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்தாகி இரண்டு மாதங்களின் பின் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததுடனேயே ஒப்பந்தம் தோல்வியில் முடிவடைந்து விட்டது எனலாம்.

சிறிலங்காவைப் பொறுத்து திரு. பிரேமதாசா ஆட்சிக்கு வந்ததும் இவ் ஒப்பந்தம் முற்றாகக் கைவிடப்பட்டது. ஒப்பந்தத்தை வன்மையாக எதிர்த்த பிரேமதாசா இந்திய இராணுவத்தை ஓர் ஆக்கிரமிப்பு இராணுவம் எனச் சொல்லும் நிலைவரை சென்றது ஆனால், இந்திய இராணுவம்வெளியேறிய பின்னர் பிரேமதாசா இந்தியாவுடன் படிப்படியாகத் தனது நல்லுறவை மிக நெருக்கமாக வளர்த்துக் கொண்டபோதிலும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்குப் புத்துயிர் கொடுக்க முற்படவில்லை.

இந்தியா ஆரம்பத்தில் ஒப்பந்தத்தைக் கைவிட மறுத்தபோதும் இறுதியில் இந்தியாவும் அதை ஏற்றுக் கொண்டது. பிரேமதாசா ஆட்சிக்கு வந்தபின் ஒப்பந்தத்தை நிராகரித்தபோது, இரு நாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தனியாக ஒரு நாடு நிராகரிக்க முடியாது எனக் கூறி வந்த இந்தியா இறுதியில் பிரேமதாசாவுடன் மிக நெருக்கமான உறவு வளர்ந்ததைத்தொடர்ந்து ஒப்பந்தத்தைக் கைவிட்டது. இந்திய அதிகாரிகள் வெளிப்படையாகவே ஒப்பந்தம் செயலிழந்து விட்டதாக அறிவித்தனர்.

இந்நிலையில் ஒப்பந்தத்தின் விளைவுகளினால் எழுந்த அரசியல் கொந்தளிப்பில் அமிழ்ந்துபோய் தனது எதிர்கால அபிலாசைகளைத் துறந்து அரசியலில் இருந்து ஒய்வெடுத்துக் கொள்வதாகவும், ஒதுங்குவதாகவும் அறிவித்திருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தற்பொழுது மீண்டும் இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றிப் பேசுகின்றார். இறந்து போன ஒப்பந்தத்தைச் சவக்குழியில் இருந்து தோண்டி எடுக்க முற்படுகின்றார்.

இப்புதைகுழி தோண்டும் படலமானது தனது அரசியலில் தானே அழிந்து போன ஜே. ஆர். ஜெயவர்த்தனா மீண்டும் அரசியலில் தான் உயிர்த்தெழுவதற்கான ஒரு நடவடிக்கையா? அல்லது தன் கண் முன்னே தனது கொள்கைகளுக்குச் சமாதிகள் கட்டப்படுவதைத் தடுக்கும் நோக்கமா? இதில் ஜே. ஆரின் இலக்கு ஒன்றாகவும் இருக்கலாம், இரண்டுமாகவும் இருக்கலாம். ஆனால் இது இலங்கைக்கு ஒருபோதும் நன்மை தராது அழிவையே ஏற்படுத்தும்.

## இடைத்தேர்தல் ஒத்திவைப்பு அரசியல்கட்சிகள் கண்டனம்

(டில்லி)

பழநி, மற்றும் ஒட்டப்பாலம் தொகுதியில் நடைபெறவிருந்த இடைத்தேர்தல்களை ஒத்திப்போடுவது என்று தேர்தல் கமிஷன் மேற்கொண்டிருக்கும் முடிவை ஜனதா தளம், சி. பி. ஐ மற்றும் சி. பி. எம் கட்சிகள் கடுமையாகக் குறை கூறியுள்ளன.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஜனதா தளம் கட்சியின் ஹரிகிசோர் சிங் மேலும் கூறுகையில் இவ்விதம் தேர்தல் ஒத்திப் போடப்படுவதற்கு காரணமே இல்லை என்றும் குறிப்பிட்டார். தேர்தல் கமிஷனின் இந்த முடிவு தன்னிச்சையானதும் நியாயமற்றதும் ஆகும் என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ குற்றம் சாட்டியுள்ளது. காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்திற்கு புறம்பாக செயற்படுவதை இது காட்டுவதாக சி. பி. ஐ. கட்சியும் சுட்டிக்காட்டியுள்ளது.

## முதல்வர் அன்னை பெயரில் சிறுவர் உலகம் திட்டம்

– புலவர் இந்திரகுமாரி தெரிவிப்பு

(சென்னை)

முதல்வர் ஜெயலலிதாவின் பெயரில் மட்டுமல்ல அவரது அன்னை சந்தியா பெயரிலும், முதல்வர் பிறந்த நட்சத்திரமான மகம் என்னும் பெயரிலும் கூடத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்று தமிழக மாநில சமூக நலத்துறை அமைச்சரான புலவர் இந்திரகுமாரி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், குழந்தைகளின் அறிவை வளர்ப்பதற்காக ஒரு கோடி ரூபா முதலீட்டில் கோயம்புத்தூரில் அறுபது ஏக்கர் நிலப்பரப்பில் சிறுவர் உலகம் அமைக்கப்படுகிறது என்றும், அறிவியல் ரீதியான சாதனங்களும்,விளையாட்டுப் பொருள்களும் இடம்பெறும் என்றும், ஜப்பான் நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் அமைக்கப்படும் இந்தக் குழந்தைகள் நிறுவனத்தின் நிர்மாணப் பணிகள் டிசம்பர் மாதத்திற்கு முன்பாகப் பூர்த்தியடையும் என்றும் தெரிவித்தார் அத்துடன் அரசின் தொட்டில் குழந்தைகள் திட்டம் என்பது குழந்தைகளை அரசு தொட்டிலில் கொண்டுவந்து போடாமல் பெற்றோரே வளர்க்கும் வகையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டம் ஆகும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் இந்தத் திட்டத்திற்கு முதல்வரின் அன்னையின் பெயர் சூட்டப்படும் எனவும், சென்னையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மகம் என்று பெயர் சூட்டப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## சந்தை பொருளாதாரத்திற்கு சீனாவும் மாறுகின்றது

(பீகிங்)

முழு அளவிலான சந்தைப் பொருளாதார முறையொன்றை நோக்கிச் செல்லும் வகையிலே சீனா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக உணவு தானியங்கள் மற்றும் சமையல் எண்ணெய் போன்றவற்றிற்கான அரச மானியங்கள் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இவற்றை இனிமேல் பாவனையாளர்கள் சந்தை விலைக்கே பெறவேண்டி இருக்கும். சீனாவில் தற்போது படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டு வரும் நாடு தழுவிய விலைச் சீர்திருத்த திட்டத்தின் ஒருபகுதியாகவே இதுவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் சீனாவில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அமுல் படுத்தப்பட்டு வந்த அரச கட்டுப்பாட்டிலான உதவித்தொகை சலுகையுடன் கூடிய விலைக்கட்டுப்பாட்டு முறை அடியோடு ஒழிக்கப்படவுள்ளது.

---

## கோரிக்கை நிராகரிப்பு

(லண்டன்)

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையை அடுத்து உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான 'எப்' பிரிவு தகுதிகாண் இரண்டாம் சுற்றிலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ள சிறிலங்கா அணி விடுத்த கோரிக்கையை சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் நிராகரித்துள்ளது.

தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் மேற்படி போட்டிகளில் சிறிலங்கா அணி பங்கு பற்றி வருகிறது.

# குடத்தனை 'ராஜன் நகர்' மேலும் அபிவிருத்தி

(வடமராட்சி)

குடத்தனையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் 'ராஜன் நகர்' மாதிரிக் கிராமம் வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது

வலிகாமம் மேற்கு பகுதிகளில் இருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து குடியமர்த்தப்பட்டுள்ள இக்கிராம மக்கள் நலன்கருதி ஐந்தாம் ஆண்டு வரையிலான ஆரம்பப் பாடசாலை ஒன்றும், அவர்ளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் தும்புத் தொழிற்சாலை ஒன்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கு ஏற்பட்டுவரும் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் இரண்டு கிணறுகள் அமைக்கப்பட்டும் வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை உத்திராவத்தை கிராமத்திலும் ஒரு பாலர் பாடசாலையை கடந்த 3ஆம் திகதி இக்கழகம் ஆரம்பித்து வைத்துள்ளது. இதில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு. பாடசாலை உபகரணங்களை இணைப்பாளர் திரு இரா. சிவச்செல்வம் வழங்கியுள்ளார். (யோ)

---

## வாதுவ செல்கிறது குமண வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு துறைமுகத்தை நோக்கி இன்று புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற ''வாதுவ'' என்கின்ற கப்பலில் இங்கிருந்து சுமார் 40 வரையிலான தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

மேலும் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கின்ற ',குமண'' கப்பலில் ஒரு தொகுதி தபால் பொதிகள் ஏற்றப்பட்டுள்ளதாகவும் இக்கப்பல் எதிர்வரும் வியாழக்கிழமையளவில் பருத்தித் துறைதுறைமுகத்தைவந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

## ஏகமனதாக தெரிவானார்

[யாழ்ப்பாணம்]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் உபதலைவராக கு.பாலகிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இலங்கைச்செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளையின் தலைவர் ஆ சிங்கராயர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்திலேயே இவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தமது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள

இவர் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தருமாவார். (பா)

## தமிழகத்தில் புலிகளை ஒருக்கியே ஆகவேண்டும்

-நரசிம்மராவ்

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை நிறுத்தியே ஆகவேண்டுமென இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த வெள்ளி சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளரிடையே பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கை கூடி இருக்கும் போது அவற்றை ஒடுக்கும் வேகமும் கூடவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

அ. இ. அ. தி. மு. கழக அரசைக் கலைக்க மத்திய அரசு திட்டமிட்டிருந்ததாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டப்பேரவையில் குறிப்பிட்டதனை அவரே சுட்டிக்காட்டி அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் அரசிற்கு இல்லை என தெரிவித்தார். அ. தி . மு. கழகம் இந்திரா காங்கிரஸ் உறவு பற்றிக் கேட்டதிற்கு அக்கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்து எதனையும் தெரிவிக்க மறுத்துள்ளதாக தெரியவருகின்றது.

## நாட்டுக்கூத்து நற்காவலன் முன்னாள் ஆயர்கௌரவிப்பு

யாழ்ப்பாண மறைமாவட்ட முன்னாள் ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் ''நாட்டுக் கூத்து நற்காவலன்'' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் கடந்த வெள்ளி முதல் எடுத்து வந்த நாட்டுக் கூத்து விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அதில் முன்னாள் ஆயர் அவர்கள் நாட்டுக்கூத்து வளர்ச்சிக்காக ஆற்றிய அரும்பணிகள் நினைவு கூரப்பட்டதுடன் மன்றத்தின் சார்பில் அருட்திரு பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் அவர்களால் ஆயருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டது. பாராட்டுப் பத்திரமும் வாசித்துக் கையளிக்கப்பட்டது.

அத்துடன் திருமறைக்கலா மன்றத்தின் நாட்டுக் கூத்து அண்ணாவிமார்களான பேக்மன் ஜெயராசா, அந்தோனி பாலதாஸ், வ. அல்பிறட், சேவியர் செல்லத்துரை ஆகியோரும் மன்ற இயக்குநரால் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இந்நாட்டுக் கூத்து விழாவில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட அண்ணாவிமார் மற்றும் கலைஞர்களுக்கு முன்னாள் ஆயர் நற்சான்றிதழ்களையும் வழங்கினார்.

யூத குமாரி, கண்ணகிவழக்குரை, பவளக்கொடி, புனித நிக்கியாஸ் ஆகிய நாட்டுக் கூத்துகளும் இறுதிநாள் நிகழ்ச்சிகளில் அரங்கேற்றப்பட்டன.

---

## கூட்டம்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் மனைப் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியைகளுக்கான கூட்டமொன்று நாளை (12. 05. 93) புதன் கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறுமெனக் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

ஈழநாதம்

# தேவையான வெண்கட்டி யாழ். வந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்திற்கு நான்கு இலட்சம் வெண்கட்டிகள் கொழும்பிலிருந்து வந்துள்ளன. இது இங்கு தேவையான தொகையில் மூன்றில் ஒன்றுகூட இல்லையென யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். கல்வித்திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மொத்தம் 6792 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். அதேவேளை ஒருவருடத்தில் 190 நாட்கள் பாடசாலை நாட்களாகும். ஓர் ஆசிரியருக்கு நாளொன்றுக்கு ஒரு வெண்கட்டி வீதம் வழங்கினாலும் மொத்தம் பன்னிரெண்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நானூற்றி எண்பது வெண்கட்டிகள் தேவை. இந்நிலையில், வந்துள்ள நான்கு இலட்சம் வெண்கட்டிகளும் சுமார் இரண்டு மாதங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை 1992ஆம் ஆண்டுக்கான வெண்கட்டிகளே இப்போது வந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ்வெண்கட்டிகளை பகிர்ந்தளிப்பதில் டன்னணி பாடசாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கிராமப்புற பாடசாலைகளில் சிலவற்றுக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இது இவ்வாறிருக்க 1993 ஆம் ஆண்டு முதலாம் தவணை முடிந்து இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இவ்வாண்டுக்கான வெண்கட்டிகள் இதுவரை வந்து சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சி) (நி)

## றிச்சார்ட் டி சொய்சா வழக்கு மீள ஆரம்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

1989இல் பத்திரிகையாளர் றிச்சார்ட் டி சொய்சா பொலிசாரால் கொலை செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கை அரசு புதிதாக ஆரம்பிக்க உத்தரவிட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

றிச்சார்ட் டி சொய்சா படுகொலையான அன்றைய தினம் அவரை வீட்டிலிருந்து அழைத்துச் சென்றதாக குற்றஞ்சாட்டப்படும் உயர் பொலிஸ் அதிகாரி ரொனி குணசிங்க ஜனாதிபதி பிரேமதாசாவுடன் குண்டு வெடிப்பில் பலியாகிவிட்டதால் சொய்சாவின் வழக்கை மீண்டும் ஆராயவேண்டும் என எதிர்க்கட்சிகள் கேட்டுள்ளன.

சொய்சாவின் தாயார் திருமதி சரவணமுத்துவிற்கு எதிராக காலஞ்சென்ற ரொனி குணசிங்க தொடுத்த மானநஷ்ட வழக்கு அவர் குண்டு வெடிப்பில் பலியானதைத் தொடர்ந்து ஏற்கனவே கைவிடப்பட்டுவிட்டமை தெரிந்ததே

தென்னாசியப் பிராந்தியத்தில்

## அரசசார்பற்ற நிறுவனங்கள் இணக்கமாகச் செயற்படும்

(கொழும்பு)

கல்வி அபிவிருத்தியில்பயிற்சி, ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பை அதிகரித்தல் மற்றும் மனித உரிமைகள் பேணல் போன்ற விடயங்களில் தென்னாசிய பிராந்திய நாடுகளில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள்இணக்கமாகச்செயற்படல் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேபாளம் தலைநகர் காட்மண்டுவில் கடந்த ஞாயிறன்று முடிவடைந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் மூன்று நாள் மாநாட்டிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவப்பிடிக்குள் சிக்கிய தமிழர்கள் பெரும் அவதி

சமீப காலத்தில் வவுனியா மாவட்டத்தில் நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் சிக்கிக்கொண்ட வவுனியா மாவட் [illegible]

பொருள்கள் போதாமல் இருப்பதனால் இவர்கள் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

இது தவிர இராணுவத்தின் [illegible]

## கண்டி அரசன் நாட்டுக்கூத்து

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் மாதர் சங்க கட்டட நிதிக்காக ''கண்டி அரசன் நாட்டுக்கூத்து'' எதிர்வரும் சனிக்கிழமை ஈச்சமோட்டை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அத்துடன் இம்மேடையில் கராட்டிக் கண்காட்சி நிகழ்ச்சியொன்றும் இடம்பெறவுள்ளது.

## ஓவியப் போட்டி

இவ்வாண்டுக்குரிய யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஆக்க ஓவியப் போட்டி மே 14-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் கொத்தணி மூலாதாரப் பாடசாலைகளில் நடைபெறும். கோட்டங்களுக்குப் பொறுப்பான சித்திர பாட சேவைக்கால ஆலோசகர்கள் இணைப்பாளர்களாகக் கடமை புரிவர்.

உரிய சித்திரத்தாள், வர்ணச்சாதனம் ஆகியவற்றை மாணவர்கள் கொண்டு வருதல் வேண்டுமென கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## உரையரங்கு

தமிழீழ திருவள்ளுவர் மன்றம். நடாத்தும் திங்கள் ஒரு உரையரங்கும் - கலந்துரையாடலும் நிகழ்ச்சியின் இம்மாத நிகழ்வு 2024 சித்திரை 29 நாளை புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெறுகின்றது.

இதில் திருமதி கோகிலா மகேந்திரன். வள்ளுவன் காட்டும் பேராண்மையும் - பெண்மையும்' என்னும் தலைப்பில் உரையாற்றுகின்றார்.

## 'குமண' வரும்

குமண கப்பல் எதிர்வரும் 15 ஆம்திகதிபருத்தித்துறைதுறைமுகத்துக்கு வரும் என தெரிய வருகின்றது.

மேற்படி கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்ஏற்பட்ட சுமுகமற்றநிலையினால் குறிப்பிட்ட தினத்தில் வரமுடியாமல் போனமை தெரிந்ததே. (சி)

## இடமாற்றம்

சிறிலங்கா இராணுவத்தினரின் வன்முறை நடவடிக்கையையிட்டு இடம்பெயர்ந்து வட்டு இந்துக் கல்லூரியில் இயங்கிவந்த பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி, கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் சங்கானை பிரதான வீதியி [illegible]

## ஆசிரியர் நியமனங்கள்; நிபந்தனைகள் தளர்வு

(கொழும்பு)

உதவி ஆசிரியர்களாகவும், பயிற்சி ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றவர்களின் சேவை நிலையம், சேவைமாவட்டம், சேவை பிரதேசம், மற்றும் சேவைக்கால தொடர்பான நிபந்தனைகள் இல்லாதொழிக்க அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

1992இலும் 1993இலும் நியமிக்கபபட்ட ஆறாயிரம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் ஜூன் மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப்பின் ஒருவருட சேவையை பூர்த்தி செய்ததும் அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர் சம்பளம் வழங்கப் படும். சேவையின்போது பட்டம பெற்ற 2000 ஆசிரியர்களுக்கும் இவ்வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி அல்லது பட்டம் பெற்ற திகதியிலிருந்து ஒருவருட சேவையை பூர்த்தி செய்ததும் பட்டதாரி ஆசிரியர் சம்பளம் வழங்கப்படும்.

பாடசாலை அதிபர்கள் அல்லது அதிபர் கடமையை கவனிக்கும் ஆசிரியர்கள் அவர்களது பதவிகளில் நிரந்தரமாக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'நகர' கப்பலில் வந்தோர் [illegible]

மாகாண சபைத் தேர்தல்

# வன்முறை, ஊழலுக்கு அரசு தயாராகி வருகிறது

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளுக்கும் தேர்தல் ஊழல்களுக்கும் அரசாங்கம் தற்போது தயாராகி வருவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவர் காமினி திசநாயக்காவின் வீட்டில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி விடயம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

எதிர்க்கட்சி ஆதரவாளர்களை குண்டர்கள் மூலம் மிரட்டி அவர்களின் வாக்குகளை தமது கட்சிக்கு பதிவு செய்யுமாறு தமது குண்டர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பணித்துள்ளது. மேலும் மாகாணசபைத் தேர்தலுக்கென அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் காணாமல் போயுள்ளன. இவை கள்ள வாக்குகளை அளிக்க பயன்படுத்தப்படலாம் என ஊகிக்கப்படுகிறது.

மேலும் வாக்காளர் அட்டைகள் விநியோகத்தில் பல குழறுபடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் தவறான இடங்களுக்கு அவை விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் பல தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்விடயங்கள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு பலமுறை பல உறுப்பினர்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு அப்பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## கிராமசேவை சலுகைகள்

(கொழும்பு)

கிராமசேவை அலுவலகர்களுக்கு சில சலுகைகளை பொது நிர்வாக மாகாணசபை உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

கிராமசேவை அலுவலர்கள் தமது நிரந்தர வசிப்பிடத்திற்கோ அல்லது கணவன் அல்லது மனைவி வசிக்கும் இடத்திற்கோஇடமாற்றம்வழங்குவது தொடர்பாக கொள்கைத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இடமாற்றம் பெற விரும்பும் கிராமசேவை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அத்துடன் கிராமசேவை

## அலுவலருக்கு அறிவிப்பு

உத்தியோகத்தர்கள் இரண்டாம் தரத்திற்கு பதவி உயர்வு ஏதும் இல்லாது நீண்ட காலம் சேவையாற்றும் கிராமசேவை அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்க புதிய விசேட தரம் ஒன்றும் உருவாக்கப்படும். இதற்கென ஜூலைக்கு முன் முதலாம் தரத்திற்கும் விசேட தரத்திற்கும் பதவி உயர்வுக்கான பரீட்சை நடைபெறும்.

வண. சிங்கராயர்

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு இவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட போதும் இவர் இரவு 7 மணியளவில் மரணமானார்.

அமைச்சரின்

ஆணையாளருக்கும் எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆனால் இன்றுவரை அதற்கு எந்தவொரு விசாரணையும் நடைபெறவில்லை. குறைந்த அளவில் பொலிஸ் விசாரணை கூட நடைபெறவில்லை.

அதிகாரம் இன்றி சட்டபூர்வ அனுமதிப்பத்திரம்இன்றி இவ்வாறான ஆயுதத்துடன் இவர்கள் திரிவதனால் வாக்காளர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அச்சம் கொள்கின்றனர். இவ்வாறு ஐவன் தெரிவித்தார்.

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

(கொழும்புத்துறை)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீழ் செயல்பட்டு வரும் பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு கடந்த 1992 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி அமைச்சின் அரச நன்கொடைப்பணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள் யாவும் தமது நிலையச் செயற்பாடுகள் சம்பந்தமான சகல ஆவணங்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் வலி - வடக்கு பிரதேச சபைக் காரியாலயத்தில் சமர்ப்பித்து அரச நன்கொடைப்பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வலி - வடக்கு பிரதேசசபைச் செயலாளர் திரு. எஸ் இராசசிங்கம் தெரிவித்துள்ளார். (24)

## ஆதாரம் காட்டி பெறவும்

யாழ். பிரதானவீதி கோவில் வீதிச்சந்தியில் இருந்து சிறு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

[illegible]

கைவிடப்பட்டுவிட்டமை தெரிந்ததே

# அரசசார்பற்ற நிறுவனங்கள் இணக்கமாகச் செயற்படும்

(கொழும்பு)

கல்வி அபிவிருத்தியில்பயிற்சி, ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பை அதிகரித்தல் மற்றும் மனித உரிமைகள் பேணல் போன்ற விடயங்களில் தென்னாசிய பிராந்திய நாடுகளில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள்இணக்கமாகச்செயற்படல் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேபாளம் தலைநகர் காட்மண்டுவில் கடந்த ஞாயிறன்று முடிவடைந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் மூன்று நாள் மாநாட்டிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவப்பிடிக்குள் சிக்கிய தமிழர்கள் பெரும் அவதி

சமீப காலத்தில் வவுனியா மாவட்டத்தில் நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் சிக்கிக் கொண்ட வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த அப்பாவி மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் போதாமல் இருப்பதனால் இவர்கள் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

இது தவிர இராணுவத்தின் அச்சுறுத்தல்களும் அதிகரித்திருப்பதாக அறியப்பட்டது. (தி)

## கட்சியிலிருந்து விலகினர்

(சென்னை)

அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் த. வீராசாமி, எம்.எல்.ஏ. இராஜமாணிக்கம் ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி திருநாவுக்கரசின் எம்.ஜி.ஆர். அ.தி.மு. கவில் இணைந்துள்ளனர்.

ஜெயலலிதா திராவிட இயக்க வழியில் இருந்து திசை மாறி செல்வதாகவும், அவரின் ஆட்சியில் எந்த அபிவிருத்தியும் செயற்படுத்தப்படவில்லை என்றும் இவர்கள் நேற்று விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

# கம்போடியாவில் தாக்குதல்; 1 லட்சம் பேர் இடம்பெயர்வு

கம்போடியாவின் எல்லைப்புறக் கிராம மொன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை தொடர்ந்து அக்கிராமத்தில் வாழ்ந்த சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான கம்போடியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இனம் தெரியாதோர் நடத்திய இத்தாக்குதலில் பெண்கள் இருவர் இறந்ததையடுத்து கம்போடியாவின் உட்புறப்பகுதிகளுக்கு இக் கிராம வாசிகள் இடம்பெயர்ந்துள்ளனர். இத் தாக்குதலில் கிராம வாசிகள் சுமார் பன்னிரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

# பாகிஸ்தான் குண்டுவெடிப்பு ஒருவர் பலி; பலர் காயம்

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கார்களிலும், மோட்டார் சைக்கிளிலும் வந்த இனந்தெரியாதோர் சனநடமாட்டம் மிகுந்த இடங்களில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டுகளை வெடிக்க வைத்ததாக உள்ளூர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.


## இடமாற்றம்

யாழ். பிரதான வீதியில் இயங்கி வந்த

# நியூ ஈரா அச்சகம்

தற்பொழுது
முன்னாள் முரசொலி பணிமனை
[லட்சுமி கட்டடம்]
டச்சு வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.


# ‘குமண’ வரும்

குமண கப்பல் எதிர்வரும் 15 ஆம்திகதிபருத்தித்துறைதுறைமுகத்துக்கு வரும் என தெரிய வருகின்றது.

மேற்படி கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்ஏற்பட்ட சுமுகமற்றநிலையினால் குறிப்பிட்ட தினத்தில் வரமுடியாமல் போனமை தெரிந்ததே. (சி)

# இடமாற்றம்

சிறிலங்கா இராணுவத்தினரின் வன்முறை நடவடிக்கையையிட்டு இடம் பெயர்ந்து வட்டு இந்துக் கல்லூரியில் இயங்கிவந்த பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி, கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் சங்கானை பிரதான வீதியிலுள்ள, சித்தன்கேணி நாவலர் கல்வி நிலையக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. (41)

# ஆசிரியர் நியமனங்கள்; நிபந்தனைகள் தளர்வு

(கொழும்பு)

உதவி ஆசிரியர்களாகவும், பயிற்சி ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றவர்களின் சேவை நிலையம், சேவைமாவட்டம், சேவை பிரதேசம், மற்றும் சேவைக்கால தொடர்பான நிபந்தனைகள் இல்லாதொழிக்க அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

1992இலும் 1993இலும் நியமிக்கபபட்ட ஆறாயிரம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் ஜூன் மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப்பின் ஒருவருட சேவையை பூர்த்தி செய்ததும் அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர் சம்பளம் வழங்கப் படும். சேவையின்போது பட்டம் பெற்ற 2000 ஆசிரியர்களுக்கும் இவ்வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி அல்லது பட்டம் பெற்ற திகதியிலிருந்து ஒருவருட சேவையை பூர்த்தி செய்ததும் பட்டதாரி ஆசிரியர் சம்பளம் வழங்கப் படும்.

பாடசாலை அதிபர்கள் அல்லது அதிபர் கடமையை கவனிக்கும் ஆசிரியர்கள் அவர்களது பதவிகளில் நிரந்தரமாக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ‘நகர’ கப்பலில் வந்தோர் திரும்ப முடியாது அவதி

[யாழ்ப்பாணம்]

“நகர” கப்பல்மூலம் யாழ்ப்பாணம் வந்த அரச ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் மீண்டும் அங்கு திரும்பிச் செல்வதற்கு ஒழுங்கு செய்து தருமாறு கோரியுள்ளனர்.

அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்து நகர கப்பல் மூலம் வந்த இவ் ஊழியர்கள் யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டதை அடுத்து யாழ். அரசாங்க அதிபர் அத்தியாவசிய நாயகத்துடன்தொடர்பு கொண்டு மீண்டும் இவர்களை நகர கப்பல் மூலம் அனுப்புவதற்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறு கேட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

இதேவேளை குறிப்பிட்ட இக் கப்பல் இருமுறை காங்கேசன் துறை துறைமுகத்திற்கு வந்து திரும்பிய போதும் இவர்கள் அக்கப்பல் மூலம் செல்ல முடியவில்லை. அதேவேளை நேற்று காங்கேசன் துறைமுகத்திற்கு வருமென எதிர்பார்க்கப்பட்ட நகர கப்பல் மூலம் செல்வதற்காக நேற்று பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு சென்ற வாதுவ கப்பலில் செல்ல முயன்ற இவர்களுக்கு அக் கப்பலில் செல்வதற்கான அனுமதி முப்படைத் தலைமைச் செயலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட கப்பலுக்கு வராததை அடுத்து நேற்று செயலகத்தில் பலமணிநேரம் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர் அதைத் தொடர்ந்து மேலதிக அரசாங்க அதிபர் இவர்களுக்கான பயண ஒழுங்குகள் தொடர்பாக கொழும்பிற்கு வானொலிச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (சி)

### கடற்படைத்

தப்பி வந்த திரு. வ. அருள்தாஸ் தெரிவித்தார்.

தங்கள் மூவரையும் சுட எத்தனித்ததாகவும், பின்னர் ஒருவாறு விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் இதேவேளை கடற்படையினர் கடலில் ஆங்காங்கு மீனவர்கள் மீது ஷெல், பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டவாறு சென்றனர்.

மற்றும் பலாலி சிறிலங்கா இராணுவ நிலைகளிலிருந்தும் தொண்டமானாறு, வளலாய் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (யோ)

### இன மத

சந்தித்த போதே அவர்கள் இவ்வாறு வாழ்த்து தெரிவித்தனர்.

புதிய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா தலதா மாளிகைக்கு குட்டிக் கொம்பன் யானையொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

### இராணுவ

றாக மூன்று தடவை சேவைக்கால நீடிப்புப் பெற்றவரான பொலிஸ் மா அதிபரின் சேவைக்காலத்தை மேலும்நீடிப்பதா என்பதில் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது.

அத்தோடு, இராணுவ சேவையில் 30 வருட காலம் சேவை யாற்றிய இரு மேஜர் ஜெனரல்கள் ஒய்வு பெறவுள்ளனர்.

இந் நிலையில் இராணுவ, பொலிஸ் தலைமையிலும் ஆயுதபடையின் கூட்டமைப்பிலும் புதிய ஜனாதிபதி மற்றங்களை செய்யத் தீர்மானித்துள்ளார்.

இம்மாற்றங்கள் அவரது கடந்தகால பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவி காலத்தில் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

ஆணையாளருக்கும் எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆனால் இன்றுவரை அதற்கு எந்தவொரு விசாரணையும் நடைபெறவில்லை. குறைந்த அளவில் பொலிஸ் விசாரணை கூட நடைபெறவில்லை.

அதிகாரம் இன்றி சட்ட பூர்வ அனுமதிப்பத்திரம்இன்றி இவ்வாறான ஆயுதத்துடன் இவர்கள் திரிவதனால் வாக்காளர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அச்சம் கொள்கின்றனர். இவ்வாறு ஐவன் தெரிவித்தார்.

சமர்ப்பித்து அரசநன்கொடைப்பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வலி - வடக்கு பிரதேசசபைச் செயலாளர் திரு. எஸ் இராசசிங்கம் தெரிவித்துள்ளார். (24)

## ஆதாரம் காட்டி பெறவும்

யாழ். பிரதானவீதி கோவில் வீதிச்சந்தியில் இருந்து சிறு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 10-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9378


வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-2764, 27-6063, 26-7286, 26-5157, 26-0525, 27-7263, 26-4526, 28-6546, 28-2829, 41-1019, 26-2668, 24-0878, 26-8223, 24-8631.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-8035, 41-9530, 26-4436, 27-4673, 26-2502, 24-1259, 40-2249, 27-7627, 26-3582, 42-2364, 27-5799, 26-0403, 41-9895, 40-2295, 41-8449, 42-0970, 26-9201, 24-8971, 41-7563, 26-6398, 26-2291.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
07-05-1947

இறைவன் அடியில்
11-04-1993

## சஞ்சோ கிறிஸ்ரி

எம்மைப் பிரிந்து சென்றவரே!

உமது நினைவை உள்ளத்தில் தொடரவிட்டீர்
நிலையற்ற வாழ்வில் எமை விட்டுச் சென்றீர்
இனிக்கவே சிரித்துநின்றீர்; இனிய பல அன்புசெய்தீர்
பனித்த உம் முகத்தைக் காணப் பாரிலின்று
துடிக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
பிள்ளைகள், தந்தை,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள். (4849)

இல. 28, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 11 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.